இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1975 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் தேதிய

பகுதி II இற்குக் குறைநிரப்பி

(21.04.75 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது)


# தெங்கு அபிவிருத்தி (திருத்தம்)

1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டமூலம்

*தோட்டத் தொழில் அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### சட்டப்பயன் பற்றிய கூற்று

*வாசகம் 3 : தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தில் உட்புகுத்தப்பட்டுள்ள புதிய 63 ஆம் பிரிவின் சட்டப்பயனாவது, அச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பனைமரத்துக்கும் அமைச்சரினால் குறிப்பிடப்படவுள்ள ஏனைய தால இன மரங்களுக்கும் ஏற்புடையனவாக்குவதாகும்.*

1—எ 13113—6,950 (03/75)

ச.வ.—ஒ 68/73
912

**1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.**

இலங்கைக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1975 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவிருத்திச் சட்டத்தில் புதிய 63ஆம் பிரிவை உட்புகுத்துதல்.

2. தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 62 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டத்தின் 63 ஆம் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"தெங்கு பற்றிய குறிப்பீடு, பனையையும், குறிப்பிட்ட வேறு தால இன மரங்களையும் உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

63. பிரிவுகள் 20, 22, 23, 30, 44, 45, 46, 48, 49, 50, 51, 62 ஆகியவற்றிலுள்ள தெங்கு பற்றிய ஏதேனும் குறிப்பீடானது, சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி, பனையையும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக் கூடியனவான அத்தகைய வேறு தால இன மரங்களையும்பற்றிய குறிப்பீட்டை உள்ளடக்குவதாகப் பொருள்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், இப்பிரிவுகளில் காணப்படும் "தெங்குப் பொருள்", "தென்னந் தோட்டம்", "தென்னை மரம்", "தெங்குத் தொழில்" ஆகிய சொல்லமைப்புகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படலும் வேண்டும்.".

2—எ 13113 (03/75)